மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருக்கோயில்களில், திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேலும் விரைவாக அத்திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து, கும்பாபிஷேகம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போது, சிறைக் கைதிகள் முன்விடுதலை குறித்து செய்தி வெளியிட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்தச் சட்டமன்றத்தின் மரபினைப் பற்றி நான் ஒரு விளக்கத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன். இன்று 4–6–2018 தேதியிட்டு, செய்தி வெளியீடு எண் 354 என்று குறிப்பிட்டு, இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலமாக ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பு என்னவென்று கேட்டால், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி, தமிழக சிறைகளில் இருக்கக்கூடிய சிறைவாசிகளை முன்விடுதலை செய்திட வேண்டுமென்று பரிசீலிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே 25–2–2018 அன்று, 10 ஆண்டுகள் தண்டனைக் காலம் நிறைவு செய்திருக்கக்கூடிய*

TRUTH ALONE TRIUMPHS

ஆயுள் தண்டனை சிறைவாசிகளில், முதற்கட்டமாக 67 பேரை முன்விடுதலை செய்திருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. அதிலே எந்தவித கருத்து மாறுபாடும் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், நான் கேட்க விரும்புவது, சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, அந்த அறிவிப்பினை முறையாக சட்டமன்றப் பேரவையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்க வேண்டும். எனவே, சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, இது எப்படி முன்கூட்டியே செய்தி வெளியீடாக வெளியிடப்பட்டிருக்கிறது? இது மரபுதானா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அதற்கு அவர் விளக்கம் சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சிறையிலே 10 ஆண்டுகள் தண்டனை முடித்த சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். அந்த அறிவிப்பின்படி, அரசாணை எண் 62 மற்றும் அரசாணை எண் 302–ன்படி, 10 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை முடித்தவர்கள், 20 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை முடித்தவர்கள், கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று அனைத்து சிறைச்சாலைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டு, அந்த விதிமுறைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. உச்ச நீதிமன்றம் கொடுத்த வழிகாட்டுதல்படி, சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு மத்திய சிறையிலும் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முற்பகல் 11–20

கடந்த காலங்களிளெல்லாம் ஒவ்வொரு சிறையிலும் மொத்தமாக சிறைவாசிகளுடைய எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டு, ஒரே நேரத்திலே விடுதலை செய்கின்ற முறை கடைப்பிடிக்கப்பட்டு

2018 ஜூன் 4] **[திரு. சி.வி. சண்முகம்]**

*வந்தது. ஆனால், தற்போது உச்ச நீதிமன்றம் ஒவ்வொரு சிறைவாசி குறித்தும் தகவல்களை சேகரித்து, அவர்களுடைய குற்றப் பின்னணி, அவர்களுடைய தண்டனைக்காலம் அனைத்தையும் பரிசீலனை செய்து, ஒவ்வொருவர் குறித்தும் தனிப்பட்ட முறையிலே விசாரணை செய்து, அதன்மீது முடிவெடுக்கப்பட்டு, பின்னர் அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னதால், ஒவ்வொரு சிறைவாசி குறித்தும் விவரம் சேகரிக்கப்பட்டு, அந்தச் சிறைவாசிகளின் எண்ணிக்கைக்கேற்ப மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டவர்கள், அரசமைப்புச் சட்டம் பிரிவு 161–ன்கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். அந்தப் பணி தொடர் பணியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மொத்தமாக ஒரே நேரத்தில் விடுதலை செய்யப்படுவதாக இருந்தால், இத்தனை சிறைவாசிகள் இன்று விடுதலை செய்யப்படுகிறார்கள் என்று அறிவித்திருக்கலாம். இது ஒரு தொடர் நடவடிக்கை; இன்னும் முடிவடையவில்லை. மேதகு ஆளுநர் அவர்கள் சிறைவாசிகளின் விவரத்தை இன்றைக்கும் அனுப்பலாம்; நாளைக்கும் அனுப்பலாம். (குறுக்கீடு) இல்லையில்லை, உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படிதான் விடுதலை செய்யப்படுகிறார்கள். முன்னர், ஒரு காலத்தில் நீங்கள் அரசாணை வெளியிட்டு, ஒரே நேரத்தில் 1200, 1300 சிறைவாசிகளை விடுதலை செய்தீர்கள்; அதை நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால், இப்போது அப்படியல்ல. ஒரு சிறைவாசியை விடுதலை செய்ய வேண்டுமென்றாலும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி–*each and every case*–ஐ ஆராய்ந்து,* case by case *ஆக விசாரணை செய்து, ஒவ்வொரு சிறைவாசிக்கும் தனியாக கோப்பு தயார் செய்து, அது மேதகு ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, மேதகு ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, தனியாக சம்பந்தப்பட்ட சிறைவாசி விடுதலை குறித்து அரசாணை வெளியிடப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருப்பதால், அதன்படி அவர்கள் இன்றைக்கு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் எத்தனை சிறைவாசிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களோ, அத்தனை சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்கள். நாளைக்கு எத்தனை பேரை விடுதலை செய்திட அனுமதி கொடுப்பார்களோ, அதைப்பொறுத்து, மேதகு ஆளுநர் அவர்கள் அனுப்புகின்ற பட்டியலின்படி, சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்குள் நான் குறுக்கிட விரும்பவில்லை. அதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது; அதை நாங்கள் முழுமனதோடு ஏற்றுக்கொள்கிறோம். நான் கேட்ட கேள்வி; சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, இப்படி ஒரு செய்தி வெளியீடு இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆட்சியில் இதுபோன்ற நேர்வில் முன்விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா? அப்படி ஒன்று நடைபெற்றிருந்தால், இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போதுதான் முதன்முதலாக நீங்கள் முன்விடுதலை செய்திருக்கிறீர்கள். சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இந்தச் செய்தியை சட்டமன்றத்தில் அறிவிக்காமல், வெளியிலே செய்திக் குறிப்பாக வெளியிடப்படுவது மரபுதானா என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்துவிட்டார்கள். இது தொடர் நடவடிக்கை. புது நடவடிக்கையாக இருந்தால், இன்றைக்கு அதைச் சட்டமன்றத்தில் சொல்லியிருப்பார்கள். அவர் ஏற்கெனவே அறிவித்து, தொடர் நடவடிக்கையாக இருப்பதால்தான் இன்றைக்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மேற்கொண்டு அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை. (குறுக்கீடு)

(ஆ) ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுதல், நிரந்தரத் தீர்வுகாண உகந்த கொள்கை முடிவை எடுத்தல் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான நடவடிக்கைகளைக் கைவிடக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.